இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

***********

ஊடக அறிக்கை

**பெருநகரங்கள் & மேற்கு அபிவிருத்தி அமைச்சர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் இணைந்து அங்குரார்ப்பணம் செய்த பில்ட்கொன் & வூட் சர்வதேச கண்காட்சி -2019 (BUILDCON& WOOD INTERNATIONAL EXPO -2019)**

***************************************************

பெருநகரங்கள் - மேற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பாட்டாளி சம்பிக்க ரணவக்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் இணைந்து 8 ஆவது இலங்கை பில்ட்கொன் இன்டர்நஷனல் எ க்ஸ்போ & 7 ஆவது வூட் இன்டர்நஷனல் எ க்ஸ்போ 2019 ($8^{th}$ Sri Lanka Buildcon International Expo & $7^{th}$ Wood International Expo 2019) ஆகியவற்றை இன்று கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

அரச மரக்கூட்டுத்தாபன தலைவர் திருமதி நிலுகா எக்கநாயக்க , பியூடெரக்ஸ் ரேட் பெயார் & இவன்ட்ஸ் தனியார். வரையறுக்கப்பட்ட, நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் திரு.பிரேம் அன்வேஷி , இந்திய தொழில் துறை சம்மேளன பணிப்பாளர் திரு அமித் பஞ்வாணி, இலங்கை அலுமெக்ஸ் பிஎல்சி முகாமைத்துவ பணிப்பாளர் திரு .பிரமுக் தெதிவல, ஜெட் ஹோல்டிங்ஸ் பிரதம நிறவேற்று அதிகாரி திரு . நிஷால் பேர்டினான்டோ, சிடிசி இவன்ட்ஸ் & ட்ரவெல்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் திரு . இம்ரான் ஹசன் மற்றும் ஏனைய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

பொறியியல் துறை, கொள்வனவு மற்றும் நிர்மாணம், வர்த்தக மற்றும் வதிவிட கட்டட நிர்மாணம் , அரச மற்றும் சிவில் உட்கட்டமைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளுடன் கவனம் செலுத்தும் 70 க்கும் அதிகமான இந்திய கம்பனிகள் இந்த கண்காட்சியில் பங்கேற்கின்றன . இக்கண்காட்சிக்கு இந்திய தொழில் துறை சம்மேளனம் மற்றும் வர்த்தக & தொழில் அமைச்சு , இந்திய அரசாங்கம் ஆகியவை ஆதரவு வழங்கியுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் நிர்மாணத்துறையினரின் வகிபாகத்தை கௌரவ பாட்டாளி சம்பிக்க ரணவக்க பாராட்டியிருந்தார் . இந்த கண்காட்சிகள் மக்கள் மற்றும் தொழில்துறை மட்டத்திலான சிறந்த சர்வதேச பிணைப்பினை உருவாக்கும் என தான் நம்புவதாகவும் அவர் கூறினார் . பெருமளவான இந்திய நிறுவனங்கள் பங்கேற்பதற்கு வழிசமைத்த இந்திய தொழில் துறை சம்மேளனத்துக்கு அமைச்சர் நன்றியையும் தெரிவித்தார்.

உயர்ஸ்தானிகர் தனது உரையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலிலிருந்து மீள்வதற்கான சகல முயற்சிகளையும் முன்னெடுக்கும் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் மக்கள் மீது இந்திய கம்பனிகளும் தொழில்துறை குழுக்களும் கொண்டிருக்கும் நம்பிக்கையின் பிரதிபலிப்பாகவே அண்மையில் நடைபெறும் கண்காட்சிகளில் இந்திய நிறுவனங்கள் அதிகளவில் பங்கேற்பதாக குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் விநியோக மார்க்கங்களில் பாரியளவில் காணப்படும் தொழில்துறை மற்றும் இந்திய சுற்றுலா பயணிகளுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான கூட்டுப்பொறுப்புடனான விஜயம் முக்கியமான செய்தியினை வழங்கியுள்ளது என உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். கடந்த இரு மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையே அதிகளவானதாக இருக்கும் அதேவேளை இரண்டாவதாக காணப்படும் எண்ணிக்கையை காட்டிலும் இரண்டுமடங்கைவிட அதிக தொகையில் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதிய உட்கட்டமைப்புக்கான கேள்வியினை துரிதமாகவும் மிருதுவாகவும் அணுகவேண்டுமென இங்கு சுட்டிக்காட்டியிருந்த அவர் இக்கேள்விகளை முதலில் ஆராய்ந்து சூழலுக்கு உகந்த வகையில் நிறைவேற்றிக்கொள்ளவேண்டும் எனவும் குறிப்பிட்டார் . சுற்றுச்சூழலின் ஸ்திரத்தன்மைக்கு உகந்த வகையில் பொருளாதார வளர்ச்சி வீச்சினை நகர்த்தவேண்டிய தேவையும் உள்ளது . இந்திய சந்தைகளில் இருக்கும் இலங்கை கம்பனிகள் குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அவர், 2025 இல் இந்திய நிர்மாண தொழில் துறை 1 ட்ரில்லியன் அமெரிக்க டொலரை அடையும் நிலையில் சிறந்த கூட்டிணைவுக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்த கண்காட்சி 2019 செப்டம்பர் 08 ஆம் திகதி நிறைவடைகிறது.

* * * *

Colombo
06 September 2019